முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1073

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

06.09.2022, செவ்வாய்கிழமை

1. பார்காக்க வந்த வள்ளலே
பரமானந்த சதாசிவ சற்குருவே
பேருலகமெங்கும் ஞானத்தை நிறுவிட
பிரணவக்குடில் படைத்த ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 21 நாள், 06.09.2022 செவ்வாய்கிழமை)
வரமென இந்த கலியுகத்தை வல்லமைமிக்க ஞானயுகமாக மாற்ற
மாற்றவே என் அவதார சக்தியாக மக்களுக்கு ஞானம் பயிற்றுகின்ற
3. பயிற்றுகின்ற ஆறுமுக அரங்கனே
பழுதில்லை உன் வழி யானே நிற்கின்றேன்
தயவாக உன்னுள் யானிருந்து
தர்மத்தை தவத்தை காத்து வருகின்றேன்
4. வருகவே உன்னை சரணடைந்து
வையகத்தில் வருகின்ற மக்களெல்லாம்
தர்ம பலத்தை அடைவதோடு
தவசி உன்வழி ஞான சித்தியும் பெறுவரப்பா
5. அப்பனே அரங்கன் காட்டுகின்ற
அளவில்லா ஞான நெறிதானே
வரங்களாகி இந்த கலியுகத்தில்
வாழவைக்கும் மக்களை ஞானிகளாக
6. ஆகவே கலியுகத்தார் முன்மொழிந்து
அரங்கன் நாமஜெபம் சொன்னால் போதும்
மிகைபட உலக மெங்கிலும் மேலான ஞான யுகமாற்றம்
களங்கமற தர்மவழி ஆட்சிகளும் கலியுகத்தில் நிறைவேறி வெற்றியாகும்
7. ஆகவே அரங்கனே கலியின்
ஆற்றல்மிக்க சிறந்த ஞானி
யுகமக்கள் உணர்ந்து உடன் வந்தால் போதும்
உலகமே ஞான ஆட்சிபெறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–